# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

<u>வட மாகாணத்தின் யாழ்ப்பாணத்திலுள்ள மீனவ சமூகத்துக்கு உதவிகள் கையளிப்பு</u>

2025 ஜனவரி 17 ஆம் திகதி பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் யாழ்ப்பாணத்திலுள்ள மீனவ சமூகத்தினருக்கான மீன்பிடி வலைகள் இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா அவர்களால் கையளிக்கப்பட்டிருந்தன.

2. இந்நிகழ்வில் உரை நிகழ்த்தியிருந்த உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா அவர்கள் இலங்கையில் மீன்பிடித்துறையின் முக்கியத்துவத்தினை இந்தியா புரிந்துகொண்டிருப்பதாக குறிப்பிட்டதுடன் இந்திய உதவிகள் அனைத்தும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி சமூகங்களை வலுவூட்டுவதனை இலக்காக் கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார். இதேவேளை இந்து சமுத்திரத்தால் ஒன்றிணைக்கப்பட்ட இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் ஆழ வேரூன்றிக் காணப்படும் வரலாற்று முக்கியத்துவமிக்கதும் கலாசார அடிப்படையிலானதுமான உறவுகள் தொடர்பாகவும் சுட்டிக்காட்டியிருந்த அவர், மீள்திறன், அர்ப்பணிப்பு மற்றும் தமது சமூகத்துக்கான நிலையான பங்களிப்புகளுக்காக மீனவர்களைப் பாராட்டியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

3. வட மாகாணத்தில் உள்ள மீனவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்காக அமுல்படுத்தப்பட்டுள்ள பல்வேறு திட்டப்பணிகளுடன் குருநகரில் மீன்பிடி வலை உற்பத்தி தொழிற்சாலை புனரமைக்கப்பட்டமையினையும் சுட்டிக்காட்டியிருந்தார். இந்நிலையில் மீனவர்களுக்காக வழங்கப்பட்ட மீன்பிடி வலைகள் குருநகர் தொழிற்சாலையிலிருந்து பெறப்பட்டிருந்தமையானது அத்தொழிற்சாலையில் பணிபுரியும் உள்ளூர் பணியாளர்களின் வாழ்வாதாரத்துக்கு மேலதிக ஆதரவினை வழங்குவதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

*************************

கொழும்பு
**19 ஜனவரி 2025**